# திருமந்திரத்தில் வாழ்வியல் நெறிமுறைகள்

***திருமதி ஜெ. கவிதா***
***உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை***
***பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி***

**முன்னுரை**

திருமூலர் எழுதிய "திருமந்திரம்" உலகப்பொதுமறை நூலாகும். இந்நூல் இறைநூல், தமிழ்ச்சாத்திரம், தமிழ் மூவாயிரம் மந்திரமாலை என்னும் பலப் பெயர்களால் சுட்டப்படுகிறது. அதுமட்டுமல்லாது வைசத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவது திருமுறையாக உள்ளது. இந்நூலானது பகுத்தறிவுக் கோட்பாட்டுடன் அணுகும் போது பகுத்தறிவு நூலாகவும், ஆன்மீகக் கோட்பாட்டுடன் அணுகும் போது ஆன்மீக நூலாகவும் விளங்குகின்றது. பன்னெடுங்காலமாக ஆன்மிகத்தின் தோற்றுவாயாகத் திகழ்ந்த இந்தியநாடு ஆன்மீகநெறிகளை உலகமெங்கும் பரவச்செய்து ஆன்மீகநெறியிலும், அறநெறியிலும் மக்கள் தழைத்தோங்கியதால் அறநெறிபிறழாது செம்மைநிலை அடைந்தனர். இருப்பினும் அண்மைக்காலமாக மக்கள் இந்நெறியில் இருந்து தவறியும் அமைதியையும் இழந்து மக்கள் வாழ்க்கை சீரழிவை நோக்கிப் பயணம் செய்கின்றனர். இந்நிலையிலிருந்து விடுபடவும் மனஅமைதியுடன் நோயின்றி நீண்ட ஆயுளுடன் நிறைவான வாழ்க்கை வாழ்ந்திட திருமூலர் அவர்கள் பொதுவுடமை நோக்கில் வாழ்க்கைக்குத் தேவையான வாழ்வியல் அறநெறித் தத்துவங்களை கூறியுள்ளார். அதை இக்கட்டுரையின் மூலம் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும், சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாவது திருமுறையாக உள்ளது. "தென்றமிழ்ப் பயன்" என்று சேக்கிழார் பெருமானாற் பாராட்டப்பட்ட திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமூலர் முனிவரை நினைத்து "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று நாவார இசைத்து மனமுருகிப் பாடியிருக்கிறார். இறையுணர்வைத் தமிழகத்தில் பரப்புவதற்காகவே தாம் பிறந்ததாக அவர் பறைசாற்றுகின்றார்.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு"**

என்று கூறிய திருமூலர் தவத்தின் பெருமையை உணர்ந்த தவச்சக்கரவர்த்தியாவார். அதனால் சிவபெருமானே அவருக்குத் தவபெருமான் என்ற பட்டத்தையும் அளித்துள்ளார்.

1. நிலையாமை
2. பஞ்சமா பாதங்கள்
3. அறவழிச் செயல்
4. குருசீடர் இயல்பு (ஆசிரியர் - மாணவரியல்பு)
5. ஆசை அறுமின்கள்

தாம் எழுதிய திருமந்திரப் பாடல் வழியாக எடுத்துரைக்கின்றார்.

**நிலையாமை**

திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என நிலையாமைப் பற்றிக் கூறுகின்றார் திருமூலர். "யாக்கை என்பதற்கு கட்டப்பட்டது என்பது பொருள். ஏழு தாதுக்களால் கட்டப்பட்ட இவ்வுடம்பு நான் எங்கு இருந்து வந்தேன்? எங்கும் போவேன்? நான் யார்? என்ற வினாவிற்கு விடையளிக்கும் விதமாகக் கூறியுள்ளார் திருமூலர். "பசு, பதி, பாசம்" என்கிறார். உயிர் இல்லா உடல் நிலைத்து நிற்காது. இந்த உடம்பானது அழியும் தன்மை வாய்ந்தது, இளமையும் எப்போதும் நிலைத்து நிற்காது செல்வமும் அவ்வாறே, இன்று ஒருவரிடம் இருந்தால் நாளை வேறொருவரிடம் இருக்கும். செல்வமானது சகடகால் போல மாறி, மாறி பயணம் செய்யும் என்றும் இவையே எல்லாமே நிலைப்புத்தன்மையற்றது என்று திருமூலர் கூறுகிறார். எனவே மக்களானவர்கள் மீண்டும், மீண்டும் பிறப்பு என்ற துன்பத்தில் உழலாமல் இருக்க இறைவனை வழிப்பட்டு அறவழியில் செல்ல வேண்டும் என்பதே அவரின் கூற்றாகும்.

**"ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பினமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே"**

என திருமூலா் உடல், உயிா், இளமை, செல்வம் எல்லாம் ஒரு மனிதனுக்கு நிலைப்புத் தன்மையற்றது என்று கூறுகிறாா்.

**பஞ்சமாபாதங்கள்**

திருக்குறள் நாலடியாா், பழமொழிநானூறு திருமந்திரம் போன்ற அற இலக்கிய நூல்களிலும் பஞ்சமாபாதங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதன் செய்யத்தகாத இழிவான செயல்களைத் தான் பஞ்சமா பாதங்கள் என்று

**"ஸ்ரீகொலையே களவுகட் காமம் பொய் கூறல்**
**மலையான பாதக மாம் அவைநீக்கித்**
**தலையாஞ் சிவனடி சாா்ந்தின் பஞ்சாா்ந் தோா்க்**
**கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே".** என்கிறது திருமந்திரம்

கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் ஆகிய ஐந்தும் மாபெரும் பாதகங்களாகும். அப்பாதகச் செயலை செய்வதைத் தவிா்த்துத் தலையின் மேல் இறைவன் திருவடிகளைச் சூடி எல்லாம் வல்ல இறைவனின் இன்பத்தைப் பெற்று இப்பாவக் காரியங்களால் வரும் துன்பங்களில் இருந்து விடுபட்டுப் பேரின்பம் அடைய வேண்டும் என்பதே மூலரின் கருத்தாகும்.

**பிறன்மனை நயவாமை**

**"மனைபுகு வாா்கள் மனைவியை நாடில்**
**சுனைபுகு நீா்போற் சுழித்துடன் வாங்கும்**
**கனவது போலக் கசிந்தெழும் இன்பம்**
**நனவது போலவும் நாடவொண் ணாதே"**

என்ற பாடல் வரியில் பிறன் மனைவியை விரும்பாமையை அழகான எடுத்துக்காட்டுடன் விளக்குகிறாா். சுனைநீரில் புகுந்து நீராட விரும்புவோருக்கு அதனால் வரும் இன்பம் கனவு போல கழியும் என்றும் நீா்சுழிகள் அவரைத் தப்பாமல் இழுத்துக் கொள்ளும். சுழியில் அகப்பட்டவா் அதிலிருந்து வெளியேறுவது அரிதாகும். அதுபோல் பிறா்மனையை விரும்புவோரும் காமச்சுழியில் சிக்கிக் கொள்வா் என்றும் இவ்வாறு ஒருவன் தன் வாழ்க்கையில் சோ்ந்த அனைத்து செல்வங்களையும் இழந்து வறுமை நிலையை அடைவான் என்று கூறுகிறாா்.

**"காமம் மிகுவுடையாா்**
**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறுங் காளையா்**
**காய்ச்ச பலவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே"**

என்ற பாடல் வரியில் அன்புக்குரிய மனைவி வீட்டில் இருக்க பிறருடைய மனைவியை விரும்புகிற காமுகா்கள் செயல் காய்த்த பலாவின் கனியையுண்ணாமல் ஈச்சம் பழமுண்ணங்கருதி இடா்ப்பட்ட மூடா்களின் செயல்களாகும் என்கிறாா் திருமூலா். எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை விட்டுவிட்டு மாதவியிடம் சென்று அனைத்துச் செல்வங்களை இழந்தான் என்பதை அனைவரும் அறிந்த செய்தியாகும்.

**கள்ளுண்ணாமை**

**"மயங்குத் தியங்குங் கள்வாய்மை அழிக்கும்**
**இயங்கும் மடவாா்தம் இன்பமே எய்தி**
**முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தாா்**
**இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே"**

என்ற பாடல் வரியில் ஒருவன் உண்ணுங் கள் தன்னையும் தன் மூளையை மயங்கச் செய்யும் பெண்ணின்பத்தை நாடிச் செல்வர். தெளிவான ஞானத்தையும், அறிவையும் பெற இயலாது என்று பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கள்ளுண்டால் ஏற்படும் விளைவுகளை திருமூலர் அழகாக விளக்கி எடுத்துரைக்கின்றார். இவ்வாறு பஞ்சமா பாதகச் செயல்களான கள், காமம், பிறன்மனை நயவாமை போன்ற செயல்களைச் செய்யும் போது ஒருவனுக்கு பொய் கூறுதலும், கொலை செய்யும் எண்ணமும், களவு செய்கின்ற எண்ணமும் கூடவே வரும் என்றும் இவற்றில் இருந்து விடுபட மக்கள் கல்வியறிவு என்ற ஞானத்தைப் பெற்று இறைவன் காட்டிய அறவழியில் செல்ல வேண்டும் என்று கூறுகிறார் திருமூலர்.

**அறவழிச்செயல்**

அறம் என்ற சொல் பரந்து விரிந்த பொருளையுடையது. திருக்குறளில் அறத்துப்பால் என்ற தனி அதிகாரமே உள்ளது.

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள”**

என்ற வள்ளுவரின் வரிக்கேற்ப திருமூலரின் பாடல் வரியும் ஒத்துப்போகும்.

**“காக்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந்து துண்மின் பழம்பொருள் போற்றன்பின்**
**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே”**

என்ற பாடல் வரியில் காக்கையானது உணவைக் கண்ட போது மறைத்து வைக்காமல் அனைத்து காகங்களையும் அழைத்துப் பகுத்துண்ணும் பழக்கமும் வழக்கமும் கொண்டது, இதனால் மனித தர்மமானது செல்வம் பெருகியவன், செல்வத்தின் பயன் அடுத்தவர்க்குப் பகிர்ந்து அளித்தலேயாகும் என்றும் அதுவே அறவழிச்செயலாகும் என்று மூலரும், வள்ளுவரும் காக்கையின் செயலை எடுத்துக்காட்டாக மனிதருக்குக் கூறுகின்றனர்.

**“எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன**
**நட்டிய நல்லறஞ் செய்யா தவர் செல்வம்**
**வட்டி கொண் டீட்டியே மண்ணின்முகந்திடும்**
**பட்டிப் பதகர் பயனறி யாரே”**

என்ற பாடல் வரியில் செல்வமானது எட்டிப்பழம் போன்றது. எப்படியென்றால் வட்டி வாங்கிச் சேர்த்துப் பணத்தைப் பெருக்கும் வஞ்சகப் பாதகர்களுக்குப் பணமானது எட்டிப்பழம் போல் அவர்கள் சேர்த்தப் பணம் யாருக்கும் பயன்படாமல் போவது போலாகும். அது மட்டுமல்லாது அவர்கள் கொடியநோய்களான இருமல், சோகை, ஈழை, வெப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்படுவார்கள் என்றும் அறம் செய்வாரைப் பாம்பு தீண்டாது. இடிவிழாது என்றும் கூறுகிறார்.

**“யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாமுண்ணும் பொரொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே”**

என்ற பாடல் வரியில் ஒரு மனிதனின் அறச் செயல்களைப் பட்டியலிட்டு கூறுகிறார். இறைவனை வணங்குவதற்காக ஒரு பச்சிலையும், பசுவுக்கொரு வாயுணவும், தான் உண்ணும் போது பிறர்க்கு ஒரு கைப்பிடி உணவும், பிறரோடு பேசுவதற்கு இனிதான சொல்லும் என மனிதனுக்கே உரித்தான உன்னதமான செயல்களைக் கூறுகிறார் திருமூலர்.

**ஆசை அறுமின்கள்**

**“ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்**
**ஆசைவிடவிட ஆனந்த மாமே”**

என்ற பாடல் வரியில் மக்கள் அனைவரும் போகப்பொருளில் ஈடுபடாமல் ஆசையை முழுவதுமாக நீக்கி அதுவும் ஈசனுடன் என்றாலும் ஆசையை நீக்கி துன்பம் என்ற மாயப்பொருளில் உழலாமல் விலகி இன்பத்தை அடைய ஆசையை அறுமின் என்று கூறுகிறார் திருமூலர். இதையே "புத்தர் ஆசையே துன்பத்திற்குக் காரணம்" எனக் கூறுகிறார்.

**குருசீடர் இயல்பு (ஆசிரியர் மாணவர் இயல்பு)**

**"சற்குணம் வாய்மை தயாவி வேகந் தன்மை**
**சற்குரு பாதமே சாயை போல் நீங்காமே**
**சிற்பர ஞானம் தெளியத் தெளிவோர்தல்**
**அற்புதமே தோன்றல் ஆகும் சற்சீடனே"**

என்ற பாடல் வரியில் ஒரு மாணவன் குருவிடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார் திருமூலர். நற்குணமுடனும், உண்மை பேசுதல், அன்பு செய்தல், விவேகமுடமை, கருணையுடமை போன்ற நற்குணங்களை ஒரு மாணவன் பெற்றிருக்க வேண்டும் என்றும், குருவானவர் மாணவனின் மும்மலத்தை நீக்கி ஞானத்தையும் அறிவையும் கொடுப்பவர் என்றும் ஆசிரியர் வணக்கத்துக்கும், மரியாதைக்குரியவராவர் என ஆசிரியர், மாணவர் இயல்புகளை அழகாக எடுத்துரைக்கின்றார் திருமூலர்.

**முடிவுரை**

திருமூலர் உலகமக்களின் நலன் கருதி ஒருசில வாழ்வியல் தத்துவங்களை மக்கள் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுகிறார். அவ்வாறான அறநெறிக்கருத்துக்களையும் தத்துவங்களையும் கடைபிடிக்கும் போது வீடு, நாடு, சமுதாயம், உலகம் என அனைத்து உயிர்களும் உலக மக்களும் பயனடைவார்கள் எனக்கூறி இளமை, யாக்கை, செல்வம் இதெல்லாம் நிரந்தரமற்றது என்றும் செல்வத்தின் பயன் அடுத்தவர்க்கு கொடுத்து உதவுவதேயாகும். பஞ்சபாதங்களான கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் போன்ற ஐந்து செயல்கள் மூலம் ஒருவனுக்கு ஏற்படுகின்ற இன்னல்களையும் எடுத்துரைக்கின்றார். பல நூற்றாண்டுக்கு முன்பே மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் தற்போது உள்ள சமுதாயத்திற்கு ஒரு சாட்டையடியாக தன் பாடல் மூலம் விவரித்துக் கூறுகிறார். பிறன்மனை நயவாமை மூலம் ஏற்படும் விளைவுகளையும் கள்ளுண்ணுவதால் மூளையின் செயல்பாட்டை, அறிவியல் விஞ்ஞானத்துடன் விளக்கிக் கூறுகிறார். ஒவ்வொரு மனிதனும் ஆசையை அகற்றி அறவழியில் செல்ல வேண்டும் என்றும் அதற்கு ஒரு சிறந்த குருவை தேர்ந்தெடுத்து குரு காட்டிய வழியில் மாணவர்கள் செல்ல வேண்டும். இளம் வயது மாணவர்களுக்குக் கல்வியறிவையும் நற்கருத்துக்களையும் போதிக்கும் போது, சமுதாயம், நாடு, உலகம் என எல்லாவற்றிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி உலகம் செழிக்க நாடு வளமை பெற திருமூலர் காட்டிய வாழ்வியல் நெறிகளையும் தத்துவங்களையும் அனைவரும் கடைப்பிடித்து பயன் பெறுமாறு படைத்துள்ளார்.